செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113


## சுவடிப் புலம்

நடத்தும்

# தமிழ்ச் செவ்வியல் நூல்களின் அச்சு வரலாறும் ஆவணங்களும்

## பயிலரங்கம் - 21

**(05.01.2022 – 11.01.2022)**

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் நூல்களின் அச்சு வரலாற்றை, குறிப்பாகத் தமிழ்ச் செவ்வியல் நூல்களின் அச்சு வரலாற்றை எழுதுதல் பற்றிய கவனம் நம்மிடையே மிகுந்துள்ளது. அச்சு நூல் உருவாக்கத்தைச் சமூக வரலாற்றுப் பார்வையில் நோக்கி எழுதவேண்டியதன் தேவையும் அவ்வாறு எழுதுகின்ற வரலாறுகள் முழுமைபெற்றது என்ற மதிப்பீடுகளும் வளரத்தொடங்கியுள்ளன. தமிழில் ஏற்பட்டுள்ள நல்லதொரு ஆய்வுச் சூழலாக இவற்றைக் கருதலாம். ஆவணங்களின் துணையின்றி எந்தவொரு வரலாற்றையும் நம்மால் முழுமையாக எழுதிவிடமுடியாது. வரலாற்றை எழுதுவதற்கு ஆவணங்களின் துணையை நாடுகின்ற அளவிற்கு, ஆவணங்களைப் பாதுகாத்தல், அவற்றின் வரலாறுகளைப் பதிவுசெய்தல் பற்றிய நாட்டம் வளரவில்லை.

பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களின் உருவாக்கக் காலம், ஆசிரியர் குறித்த விவரங்களைப் பதிவுசெய்வதைப் போன்று அவற்றின் அச்சுருவாக்க வரலாற்றைப் பதிவுசெய்யும் வழக்கம் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுவோரிடம் இல்லை. இவ்வழக்கமின்மைக்குக் காரணம் முழுமையான வரலாற்று ஆவணம் நம்மிடம் இல்லை என்பதேயாகும்.

அச்சு ஊடக வருகைக்குப் பின்னர், தமிழில் நிகழ்ந்த அச்சு நூல்களின் வரலாற்று ஆவணம் தமிழில் முழுமையாக இல்லை. அச்சு ஊடகத்தை நமக்கு அறிமுகப்படுத்திச் சென்ற ஐரோப்பியர்களே அச்சு நூல் விவரச் சேகரிப்புப் பற்றிய முக்கியத்துவத்தை

நமக்கு உணர்த்திச் சென்றுள்ளனர். இவர்களுள், ஜான் மர்டாக் (John Murdoch) என்ற ஐரோப்பியர் முன்னோடியாகத் திகழ்கிறார். இவர் உருவாக்கிய தமிழ் நூல்களுக்கான அட்டவணையில் (Classified catalogue of Tamil printed books: 1865) பல அச்சு நூல்களின் பதிப்பு ஆண்டு குறிக்கப்படவில்லை என்றாலும், அது அச்சு நூல்களின் அட்டவணை உருவாக்கத்தின் நன்முயற்சியாக இருந்தது. ஜி.யு.போப், எல்.டி. பர்னெட் இருவரும் இணைந்து இலண்டன் அருகாட்சியக நூலகத்திலிருந்த தமிழ் நூல்களுக்கான அட்டவணையை உருவாக்கினர். இவர்கள் உருவாக்கிய அட்டவணைகள் 1909, 1931ஆம் ஆண்டுகளில் வெளிவந்தன. இவற்றின் வழியாகப் பல செவ்வியல் நூல்களின் பதிப்பு வரலாற்றை அறிந்துகொள்ள முடிகின்றது.

தமிழில் அச்சுருவான நூல்களின் விவரங்கள் அடங்கிய அட்டவணைகள் 1961இல் தமிழ்நாட்டு அரசின் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தினரால் வெளியிடப்பட்டன. ‘தமிழ் நூல் விவர அட்டவணை’ என்ற பெயரில் வெளிவந்த அவற்றுள் 1867லிருந்து 1900 வரை அச்சுருவான நூல்களின் விவரங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்தன. பெரும்பான்மையான செவ்வியல் தமிழ் நூல்களின் பதிப்பு வரலாறுகளை அறிவதற்குரிய ஆவணமாக அவை விளங்கின. கிரஹாம் ஷா என்ற ஆங்கிலேயர் The South Asia and Burma Retrospective Bibliography என்ற நூலொன்றை எழுதியிருந்தார். 1987இல் பிரிட்டீஷ் நூலகம் வெளியிட்ட அவற்றுள் 1556 முதல் 1800 வரை அச்சுருவான நூல்களின் விவரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. 266 தமிழ் நூல்கள் மேற்கண்ட காலப் பகுதியில் அச்சுருவானதாக இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சில தமிழ் நூல்களின் அச்சு வரலாற்றை இவற்றின் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெற்றுள்ள மேற்கண்ட ஆக்கங்களைத் தவிர, தமிழ் நூல்களின் அச்சுருவாக்க விவரங்களைக் கொண்ட முழுமையான ஒரு ஆக்கத்தை உருவாக்க யாரும் முனையவில்லை.

இத்தகைய பின்புலத்தில்தான் தமிழ்ச் செவ்வியல் நூல்களின் அச்சுருவாக்க வரலாற்றை எழுதவும், அதற்குரிய ஆவணங்களைப் பாதுகாக்கவும் வேண்டிய தேவையை மிகவும் உணர வேண்டியுள்ளது. இவ்வகைத் தேவையின் ஒருபகுதியை நிறைவுசெய்யும் விதமாக இப்பயிலரங்கம் நடத்தப்பெறுகிறது. ஆய்வு மாணவர்கள் ஆவணப்படுத்துதலின் அவசியத்தை உணர்ந்து செயலாற்ற வேண்டுமென்பது இப்பயிலரங்கத்தின் தலையாய நோக்கமாகும்.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் துறைசார்ந்த அறிஞர்கள் பயிற்சி அளிக்க உள்ளனர். தமிழ் நூல்களின்

வரலாற்றை ஆவணங்களின் துணைகொண்டு எழுதவும், பாதுகாக்கவும் முயற்சிக்க வேண்டுமென்ற வகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வரும் மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

இப்பயிலரங்கமானது 05.01.2022 முதல் 11.01.2022ஆம் நாள் முடிய ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 05.01.2022 முதல் 11.01.2022 முடிய 7 நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopc@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 27.12. 2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 29.12.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## தமிழ்ச் செவ்வியல் நூல்களின் அச்சு வரலாறும் ஆவணங்களும்

## பயிலரங்கம்

## (05.01.2022 – 11.01.2022)

### விண்ணப்பப் படிவம்

நிழற்படம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள்/ வயது | | |
| 3. | பாலினம் (✓ செய்க) | | ஆண் ☐ பெண் ☐ திருநங்கை ☐ |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது ☐ இ.பி.வ. ☐ பட்டியல் இனத்தவர் ☐ |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |
| 11. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்துகொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக | | ஆம் ☐ இல்லை ☐ |

நாள் :

(கையொப்பம்)

இடம்:

**நெறியாளர் /துறைத்தலைவர்/முதல்வர்/பதிவாளர்**
**உரிய முத்திரையுடன் கையொப்பம்**